# மேம்பாலத்தில் 21 நிலையங்கள்

## மாதவரம் – சிறுசேரி மெட்ரோ 'டெண்டர்' நடவடிக்கை துவக்கம்

– நமது நிருபர் –

சென்னை, மாதவரம் – சிறுசேரி சிப்காட் வழித்தடத்தில் செயல்படுத்தப்பட உள்ள மெட்ரோ ரயில் திட்டத்தில், 21 மேம்பால ரயில் நிலைய கட்டுமானப் பணிகளுக்கான, 'டெண்டர்' நடவடிக்கைகளை துவக்கி உள்ளது.

சென்னையில், மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டம், 69 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது.

இதில், 128 நிலையங்கள் அமைகின்றன. இப்பணிகளை, 2026க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம், 45.13 கி.மீ., தொலைவுக்கு, மாதவரம் – சிறுசேரி சிப்காட் வழித்தடம் அமைக்கப்படுகிறது. இதில், 26.72 கி.மீ., சுரங்க முறையிலும், 19.9 கி.மீ., மேம்பால முறையிலும் அமைக்கப்படுகின்றன.

இந்த வழித்தடத்தில் அமைய உள்ள, 49 ரயில் நிலையங்களில், 20 நிலத்துக்கு மேலும், 29 சுரங்க முறையிலும் அமைய உள்ளன.

மாதவரம், மூலக்கடை, செம்பியம், பெரம்பூர், ஓட்டேரி, பட்டாளம், அயனாவரம், புரசைவாக்கம், கெல்லீஸ், கீழ்ப்பாக்கம், சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு, ராயப்பேட்டை, மயிலாப்பூர், மந்தைவெளி, கிரீன் வேஸ் சாலை, அடையாறு, திருவான்மியூர், தரமணி, பெருங்குடி, துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி, சிறுசேரி, சிப்காட் ஆகிய பகுதிகள் இணைக்கப்படும்.

இதில், ரயில் பாதை மற்றும் நிலையங்கள் அமைக்க, உலக அளவில் ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, சுரங்க முறையில் ரயில் பாதை அமைப்பதற்கான டெண்டர் நடவடிக்கைகள், ஏற்கனவே துவங்கப்பட்டுவிட்டன.

தற்போது, மேம்பால ரயில் பாதை, ரயில் நிலையங்கள் அமைக்கும் கட்டுமானப் பணிகளுக்கான டெண்டர் நடவடிக்கைகளை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் துவக்கி உள்ளது.

உயர் முன்னுரிமை அடிப்படையில், இதற்கான நடவடிக்கைகளை மெட்ரோ அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். டெண்டரில் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்கள், அடுத்த சில மாதங்களில் கட்டுமானப் பணிகளை துவங்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

### ரூ.25 ஆயிரம் கோடி செலவு!

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம், 69 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படுகிறது. இதில், மாதவரம் – சிறுசேரி சிப்காட் வழித்தட பணிகளுக்கான மதிப்பீடு விபரம்:

நிலங்களுக்கு: ரூ.4,469 கோடி

அடிப்படை வடிவமைப்பு தயாரிப்புக்கு: ரூ.4,665 கோடி

கட்டுமானப் பணிகளுக்கு: ரூ.8,717 கோடி

சிக்னல் வசதிகளுக்கு: ரூ.1,469 கோடி

இதர வகை செலவுகளுக்கு: ரூ.6,307 கோடி

மொத்தம்: ரூ.25,627 கோடி




### 10 ரயில் நிலையங்கள்!

மாதவரம் – சிறுசேரி சிப்காட் வழித்தடத்தில், பழைய மாமல்லபுரம் சாலையில், 10 ரயில் நிலையங்கள் அமைப்பதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது.

இப்பாதையில், நேரு நகர், கந்தன்சாவடி, பெருங்குடி, துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம், பி.டி.சி., காலனி, ஒக்கியம்பேட்டை, காரப்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரில் நிலையங்கள் கட்டுவதற்கும், உலக அளவில் ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில், நேரு நகர் முதல் ஒக்கியம் துரைப்பாக்கம் வரையிலான ஒன்பது ரயில் நிலையங்கள், 140 மீ., நீளம், 32.35 மீ., அகலத்தில் அமைய உள்ளன.

சோழிங்கநல்லூர் ரயில் நிலையம் மட்டும், 140 மீ., நீளத்திலும், 60 மீ., அகலத்திலும் அமைய உள்ளது.